# தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

## மானியக் கோரிக்கை எண். 31

## அறிவிப்புகள்
## 2023 – 2024

# தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

## மானியக் கோரிக்கை எண். 31

அறிவிப்புகள்
2023 - 2024

**த. மனோ தங்கராஜ்**
தகவல் தொழில்நுட்பவியல் மற்றும்
டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

## 1) சோழிங்கநல்லூர் எல்கோசெஸ்- இல் உலகத்தரம் வாய்ந்த பசுமைப் பூங்கா அமைத்தல். (Setting up of a Green Park at International Standards at ELCOSEZ, Sholinganallur)

எல்கோசெஸ், சோழிங்கநல்லூரில் 377.08 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. அதில் காலியாக உள்ள 59.59 ஏக்கர் நீர் தேங்கும் பகுதியில், சோழிங்கநல்லூர் தொழில்நுட்பப் பூங்காவில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையிலும், சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு வழிவகுக்கும் வகையிலும் பூந்தோட்டம், மூங்கில் காடுகள், குறுங்காடுகள், சோலார் மின் விளக்குகள், நடைபாதை மற்றும் சைக்கிள் பாதை வசதிகளுடன் கூடிய பசுமைப் பூங்காவினை ரூ.20 கோடி செலவினத்தில் எல்காட் நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்து அமைத்திட அரசு திட்டமிட்டுள்ளது.

2) எல்காட் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை பசுமை தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களாக சர்வதேச தரத்தில் மேம்படுத்தல். (Enhancement of ELCOT IT Parks as Green IT Parks at International Standards)

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மாநிலம் முழுவதும் எட்டு எல்கோசெஸ்களை உருவாக்கியுள்ளது. பல்வேறு IT/ITeS நிறுவனங்கள் இப்பூங்காக்களில் செயல்படுகின்றன. இந்நிறுவனப் பணியாளர்கள் பயன்பெறும் வகையிலும், இந்தத் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் வகையிலும், பின்வரும் வசதிகளை ரூ.40 கோடி செலவினத்தில் எல்காட் நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்து அங்கு ஏற்படுத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

- வீட்டு வசதி ஏற்படுத்துதல்.
- நிர்வாக அலுவலகத்திற்கான கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.

- நுண்ணறி நீர்மானி (Smart Water Meter) மூலம் நிறுவனங்களுக்குத் தண்ணீர் வழங்குதல்.
- சூரியத்தகடுகள் (Solar Panels) மூலம் இயங்கும் தெரு விளக்குகள், உயர்கம்ப விளக்குகள் அமைத்தல்.
- உணவகத்துடன் கூடிய அடுக்குமாடி வணிக வளாகம் அமைத்தல்.
- மின்சார வாகனங்கள் மின்னேற்றும் நிலையம் அமைத்தல்.
- திறந்த வெளி நிலப்பகுதியில் (OSR) பசுமைப் பூங்கா அமைத்தல்.
- தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களில் உள்ள காலி இடங்கள் மற்றும் வாகன நிறுத்துமிடங்களில் சூரியத்தகடுகளை (Solar Panels) அமைத்தல்.

3) அசைவூட்டப்படம் (Animation), காட்சி வெளிப்பாடு (Visual Effects), வேடிக்கையான விளையாட்டு (Gaming & Comics) (AVGC) மற்றும் விரிவாக்கப்பட்ட மெய்நிகர் (Extended Reality - ER) கொள்கை.

அசைவூட்டப்படம் (Animation), காட்சி வெளிப்பாடு (Visual Effects), வேடிக்கையான விளையாட்டு (Gaming & Comics) மற்றும் விரிவாக்கப்பட்ட மெய்நிகர் (ER) துறையானது, தேசிய அளவில் மிகவும் வேகமான வளர்ச்சியைக் கண்டுவருகிறது. தமிழகத்தில் இத்துறையில் முதலீடு செய்ய நிறுவனங்களை ஈர்க்கும் வகையில் அசைவூட்டப்படம் (Animation), காட்சி வெளிப்பாடு (Visual Effects), வேடிக்கையான விளையாட்டு (Gaming & Comics) மற்றும் விரிவாக்கப்பட்ட மெய்நிகர் (ER) துறைக்கான "AVGC & ER" கொள்கையைத் தமிழ்நாடு அரசு வெளியிடும்.

## 4) இடைமுகப் பயன்பாட்டு நிரலி நுழைவாயில். (API Gateway)

தமிழ்நாடு அரசு பல்வேறு அரசுத் துறைகளின் மென்பொருள் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க, ஒரு இடைமுகப் பயன்பாட்டு நிரலி நுழைவாயிலை (API Gateway) மாநில குடும்பத் தரவு தளத்தின் (SFDB) நிதியை பயன்படுத்தி உருவாக்க முடிவுசெய்துள்ளது. இந்த நுழைவாயில், பயனர் துறைகள் இதர அரசுத் துறைகளின் சேவைத் தளங்களை அணுக உதவும் ஒரு ஒருங்கிணைந்த தளமாகச் செயல்படும். இத்தளமானது அனைத்துத் துறைகளின் தரவுகளை எளிதான, பாதுகாப்பான மற்றும் வெளிப்படையான முறையில் அணுகுவதை உறுதிசெய்து, பொதுமக்களுக்கு அரசின் சேவைகளை உயர்ந்த தரத்துடன் விரைவாக வழங்க வழிவகை செய்யும்.

## 5) தமிழ்நாடு நலத்திட்டப் பயனாளிகளுக்கான நேரடிப் பயன் பரிமாற்றத் தளம் (Tamil Nadu DBT Platform)

நேரடிப் பயன் பரிமாற்றத் தளமானது மக்களின் வங்கிக் கணக்கிற்கு மாநில மற்றும் ஒன்றிய அரசின் நலத்திட்டங்களுக்கான நேரடி ஊக்கத்தொகை / மானியத்தொகை / பணப்பலன் பரிமாற்றங்களைச் செயல்படுத்தும் ஒரு ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்தளம் ரூ.1.72 கோடி செலவினத்தில் (நான்கு ஆண்டுகளுக்கு) தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் வருவாய்ப் பங்கீட்டிலிருந்து உருவாக்கப்படும். மக்கள், பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் தாங்கள் பெற்ற பயன்களை இணையதள / கைபேசி செயலி மூலம் அறிந்துகொள்ளலாம். இது திறம்படவும் வெளிப்படைத் தன்மையுடனும் அரசின் திட்டங்கள் செயல்படுவதை உறுதிசெய்யும்.

## 6) தமிழ்நாடு இணையவழி அரசு சேவைகளுக்கான ஒற்றை நுழைவுதளம். (Tamil Nadu Single Sign-On (TNSSO) Platform)

தமிழ்நாடு இணையவழி அரசு சேவைகளுக்கான ஒற்றை நுழைவுதளம் (TNSSO) என்பது, ஒவ்வொரு துறைப் பயன்பாட்டிற்கும் வெவ்வேறு இணைய முகவரிகளை (URL) நினைவில் வைத்திருக்கும் தேவையை நீக்கியும், தனித்தனி உள்நுழைவுப் பதிவு மற்றும் அங்கீகரிப்பு முறையை நீக்கியும், மாநில அரசின் அனைத்து வலைதளங்களையும் தடையின்றி அணுகுவதற்கு உதவுகிறது. மேலும், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அரசின் சேவைகளைப் பொதுவான, மையப்படுத்தப்பட்ட பாதுகாப்பான முறையில் எளிதாக அணுகுவதற்குத் தமிழ்நாடு இணையவழி அரசு சேவைகளுக்கான ஒற்றை நுழைவுத் திட்டத்தை ரூ.11 கோடி செலவினத்தில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் வருவாய்ப் பங்கீட்டிலிருந்து செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

## 7) தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு அமைப்பு. (Tamil Nadu AI Mission)

ஆளுகையை எளிதாக்குவதில் செயற்கை நுண்ணறிவு / இயந்திரக் கற்றலின் ஆற்றலைப் பயன்படுத்துவதற்காக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது (TNeGA), தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்துடன் (iTNT Hub) இணைந்து "தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு அமைப்பு" (Tamil Nadu AI Mission) ஒன்றை தமிழ்நாடு புதுமை முயற்சிகள் நிதி (TANII) (செயற்கை நுண்ணறிவுக்காக ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்டது) மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் சொந்த நிதியிலிருந்து உருவாக்கும். இந்த அமைப்பு தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தொடக்கநிலை நிறுவனங்களுடன் இணைந்து மின் ஆளுமைத் திறன்களை மேம்படுத்துதல், புதுமைகளை ஊக்குவித்தல் மற்றும் பொருத்தமான கொள்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.

## 8) 100 புதிய சேவைகளை இ-சேவை மற்றும் மக்கள் சேவை தளத்தில் வழங்குதல்.
(100 New Services through e-Sevai and Citizen Portal)

காகிதமில்லாத, வெளிப்படையான மற்றும் நேரடித் தொடர்பில்லாத ஆளுகையை வழங்குவதற்காக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது அரசின் பல்வேறு சேவைகளை இ- சேவை மற்றும் மக்கள் சேவை தளத்தின் வழியாக வழங்கி வருகிறது. 2023-24-ஆம் ஆண்டில், கூடுதலாக 100 புதிய சேவைகள் ரூ.120 இலட்சம் செலவினத்தில் மின் – மாவட்டத் திட்டத்தின் நிதியைப் பயன்படுத்தி இ-சேவை மற்றும் மக்கள் சேவை தளத்தில் வழங்கப்படும்.

## 9) மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களுக்கு அதிவேக இணைய இணைப்பை வழங்குதல். (Provision of High Speed Internet Services to Government Offices)

மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 20,000 அரசு அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு நம்பகமான, அதிவேக மற்றும் பாதுகாப்பான இணைய இணைப்பை வழங்க ரூ.184 கோடி முதலீடு செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இம்முயற்சியானது, அரசின் செயல்பாடுகள் மற்றும் சேவைகளின் செயல்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது திறன்மிகு ஆளுகைக்கான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை அதிகரிக்கும்.

10) மாநிலத்தில் உள்ள குடும்பங்களுக்கு குறைந்த விலையில், நம்பகமான அதிவேக இணைய சேவைகளை வழங்குதல். (Provision of Affordable, Reliable High Speed Internet Services to Households in the State)

உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களின் சேவைகளைப் பயன்படுத்தி, மாநிலத்தில் உள்ள குடும்பங்களுக்கு குறைந்த விலையில், நம்பகமான அதிவேக இணைய சேவைகளை ரூ.100 கோடி செலவினத்தில் அரசு / பொதுச்சந்தை/ நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இது டிஜிட்டல் இடைவெளியைக் குறைக்கவும், மாநிலத்தில் டிஜிட்டல் புரட்சியை ஏற்படுத்தவும், மக்களுக்கு அவர்களின் இருப்பிடத்திலேயே அரசின் சேவைகளை வழங்குவதில் ஒரு ஊக்கியாகச் செயல்படும்.

## 11) தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் பிற நகரங்களுக்கு விரிவாக்கம். (Expansion of iTNT-Hub to Tier - II and Tier - III Cities)

பொது மற்றும் தனியார் பங்களிப்பில் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT-Hub) அமைப்பதற்கான பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது. சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் 30,000 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த மையம் விரைவில் திறக்கப்படும். தமிழகத்தை உலகளாவிய புத்தாக்க இலக்காக மாற்றும் மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வைக்கு இம்முயற்சி உறுதுணையாக இருக்கும். அனைத்து தொழில்நுட்பத் தீர்வுகளுக்கான மையப்படுத்தப்பட்ட (Hub and Spoke) அமைப்பில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தை மாநிலத்தில் உள்ள இரண்டு மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி, ஈரோடு மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்கள் இதற்காக கண்டறியப்பட்டு ஆயத்தப் பணிகள் நடைபெற்று

வருகின்றன. இம்மையங்களுக்கான நிதியுதவி, பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் தொழில் பங்குதாரர்களின் பங்களிப்புடன் தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தால் வழங்கப்படும்.

**12) ஆசிரியர்களுக்கான பயிற்சியளிக்கும் நோக்கில் ESDM, AVGC & IT துறைகளுக்கான சீர்மிகு மையம் (Centre of Excellence – CoE) நிறுவப்படும்.**

Electronics System Design and Manufacturing (ESDM), Animation, Visual Effects, Gaming and Comics (AVGC) & IT துறைகளில் உயர்கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கான சீர்மிகு மையத்தை (CoE) அமைக்க, தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. மேம்பட்ட தொழில்நுட்பங்களுக்கான திறன் தேவை மற்றும் தொழில்துறை 4.0-இன் தேவையை நிறைவு செய்வதற்கான திறன் பயிற்சி, சிறந்த நடைமுறைகள், மதிப்பீடுகள் வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் பலதரப்பட்ட அணுகுமுறையுடன் கூடிய ஆதரவை இம்மையம் வழங்கும். அரசு நிறுவனங்கள், தொழில் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து ரூ.10 கோடி செலவினத்தில் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் (ICT Academy) சொந்த நிதியிலிருந்து இந்த மையம் அமைக்கப்படும்.

## 13) இணையப் பாதுகாப்பு 2.0 (Cyber Security 2.0)

தமிழ்நாடு அரசு 2020-ஆம் ஆண்டில் இணையப் பாதுகாப்புக் கொள்கையை வெளியிட்டது. மாநிலத்தின் தகவல் தொழில்நுட்பச் சொத்துகள் தமிழ்நாடு இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பால் (CSA-TN) பாதுகாக்கப்படுகின்றன.

மேகக்கணினிய அடிப்படையிலான கம்ப்யூட்டிங், மின்-அலுவலகம் போன்றவற்றின் தற்போதைய போக்கிற்கேற்ப கூடுதலான சொத்துகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட நடைமுறைகளை உள்ளடக்கிய வகையில் இக்கொள்கை புதுப்பிக்கப்படும்.

**த. மனோ தங்கராஜ்**
தகவல் தொழில்நுட்பவியல் மற்றும்
டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்